பெண்களுக்கான மத்திய சிறைச்சாலைகள்.

*325— வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் பெண்களுக்கென மத்திய சிறைச்சாலைகள் எங்கெங்கு உள்ளன ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR; There is only one Central Prison for Women in Tamilnadu which is situated at Vellore in North Arcot District.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே ; பெண்கள் கைது செய்யப்படுகிற அவசியம் ஏற்படுகிறபோது, தூத்துக்குடியில் கைது செய்தாலும், கன்னியாகுமரியிலே கைது செய்தாலும், அவர்களை வேலூருக்குக் கொண்டு வருகின்ற துன்பமும், தொல்லையும் ஏற்படுகிறது. எனவே, இதைக் கருதி அரசாங்கம் இனி பெண்களை கைது செய்வதில்லை என்று முடிவெடுக்கின்ற அந்தக் காலம் வரையிலாவது, பெண் அரசியல் கைதிகளை, ஆசிரியைகளைக் கைது செய்வதில்லை என்று முடிவெடுக்கின்ற அந்தக் காலம் வரையிலாவது, மதுரை போன்ற இடத்தில் தெற்குப் பக்கத்திலே பெண்களுக்கான ஒரு மத்திய சிறைச் சாலையை அரசு ஏற்படுத்த முன்வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The suggestion will be subjected to the Governments consideration.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூருக்கு அருகாமையில் இருக்கின்ற திறந்த வெளிச் சிறைச் சாலை எப்போது துவங்கப்பட இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன் .

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: This question does not arise from the principal question.

இறால் மீன் பிடிப்பு.

*326 வினா— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இறால், சிங்கி இறால் போன்ற மீன் வகைகள் கடலில் எந்தெந்த இடத்தில் இருக்கின்றன என்பதைப் பற்றி சர்வே செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?